# அரசு பற்றிய பல்தேர்வு வினாக்கள்

MJM. Saneer MA

- அரசு பற்றிய பின்வரும் மாதிரி வினாக்களுக்கு விடை தருக.

1. அரசு பற்றிய படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) அரசு வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட தாபனமன்று.
   (B) அரசு சமூக ஒப்பந்தத்தின் விளைவாகவே தோன்றியது.
   (C) அரசு நீண்டகால வரலாற்று வளர்ச்சியின் விளைவாகும்.
   (D) அரசின் படிமுறை வளர்ச்சியின் ஆரம்ப அலகு குடும்பமாகும்.
   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB
   (..........)
2. அரசு பற்றிய தாராண்மைக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) மனிதர் தமது நல்வாழ்வுக்காக அரசைத் தோற்றுவித்தனர்.
   (B) மனிதர்களுக்குக் தேவைப்படுவதனாலேயே அரசு உருவாக்கப்பட்டு பேணப்படுகின்றது.
   (C) அரசு சமூகத்தில் ஒரு தன்னிச்சையான சங்கமாகும்.
   (D) அரசின் அதிகாரம் அதிகரிக்கும் போது அளவிற்குப் பொது மக்களின் நன்மை அதிகரிக்கும்.
   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB
   (..........)
3. அரசு பற்றிய மார்க்சியக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.
   (A) இலட்சிய கம்யுனிஸ சார் சமூகத்தில் அரசு தொழிலாளர் வர்க்கத்தினால் கட்டுப்படுத்தப்படும்.
   (B) அரசின் இருப்பு சமூகத்தின் வர்க்கங்களின் இருப்போடு தொடர்புபட்டுள்ளது.
   (C) அரசு சமூக நலன்பேணும் தாபனமன்று.
   (D) ஒரு வர்க்கத்தில் அரசு ஆதிக்க வர்க்கத்தின் கருவியாகும்
   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB
   (..........)
4. அரசு பற்றிய பாசிசக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) அரசு முழுச்சமூகத்தின் கூட்டு விருப்பத்தினை உள்ளடக்கியது.
   (B) அரசுக்குப் பணிதல் பிரஜைகளின் கடமையாகும்.
   (C) அரசில் தனியாளின் சுதந்திரத்திற்கு இடமில்லை.
   (D) அரசு சமூகத்திலுள்ள பிறிதொரு சங்கம் மட்டுமாகும்.
   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB
   (..........)
5. அரசு பற்றிய தெய்வீக உரிமைக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) அரசு கடவுளின் உருவாக்கமாகும்
   (B) ஆட்சியாளன் கடவுளின் விருப்பத்தினையே நடைமுறைப்படுத்துகிறான்.
   (C) ஆட்சியாளன் கடவுளுக்கு மட்டுமே பொறுப்புக் கூறக் கடமைப்படுகின்றான்.
   (D) ஆட்சியாளனின் செயற்பாடுகளுக்கு ஆளப்படுவோர் தீர்ப்பளிப்பர்..
   (1) ABC (2) ABD (3) BCD (4) ACD
   (..........)
6. அரசு பற்றிய தாராண்மைக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) அரசு மனிதரால் தாபிக்கப்பட்ட சமூக நிறுவனமாகும்.
   (B) அரசு மனிதரின் விருப்பத்திற்கு எதிராக செயற்படும் போது அதனைக் கலைத்துவிடலாம்.
   (C) அரசின் பிரதான நோக்கம் பொது நன்மையை மேம்படுத்துவதாகும்.
   (D) அரசு மனித முன்னேற்றத்திற்கு அத்தியவசியமாகிறது.
   (1) ABC (2) ABD (3) BCD (4) ACD
   (..........)
7. அரசு பற்றிய மாக்சீயக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானம்
   (A) அரசு மனித இனத்தின் வரலாறு பூராவும் நிலவி வந்துள்ளது.
   (B) அரசு என்பது சொத்துடைய வர்க்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வர்க்கக் கருவியாகும்.
   (C) முதலாளித்துவ அரசை சோசலிசப் புரட்சி மூலம் மட்டுமே வீழ்த்தலாம்.
   (D) அரசு நிரந்தரமற்றதும். அது கொம்யூனிச சமூக முறையில் பட்டடொழியும்.
   (1) ABC (2) ABD (3) BCD (4) ACD
   (..........)

8. அரசு பற்றிய பாசிசக் கோட்பாட்டிற்குப் பொருத்தமான சேர்மானம்
(A) அரசு மக்களின் விருப்பத்திற்கு எதிராகச் செயற்படும் போது மக்கள் அதற்கு எதிராக கிளர்ச்சி செய்ய முடியும்.
(B) அரசுக்கு மனிதர் அடிபணியும் அளவிற்கு அவர்கள் சுதந்திரம் பெறுவர்.
(C) அரசு தனிமுதன்மை அதிகாரத்தைப் பெறும் அதே வேளை மனிதர் நிபந்தனையின்றி அதற்கு அடிபணிய வேண்டும்.
(D) மக்கள் அரசுக்காவே அன்றி அரசு மக்களுக்காகவன்று.

(1) ABC (2) ABD (3) BCD (4) ACD

(..........)

9. அரசின் இயல்போடு சரியாக ஒத்துப்போகும் வரிசையை இனங்காண்க.
(1) நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் - பாஸிஸம்
(2) இன முதன்மை நிலை - சோசலிசம்
(3) தனிமனிதவாதம் - தாராண்மை ஜனநாயகம்
(4) ஒரு கட்சி சர்வாதிகாரம் - மானிய முறைமை

(..........)

10. தாராண்மைவாதற்திற்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) தாராண்மைவாதத்தின் தோற்றம் மானிய முறையின் வீழ்ச்சியோடு இணைந்ததாகும்.
(B) தாராண்மைவாதத்திற்கான விதையைகளைப் புரடஸ்தாந்தும் தூவியது.
(C) ஆரம்ப தாராண்மைவாதம் சமூக நலனுக்காகப் பிரசாரம் செய்தது.
(D) அது முதலாளித்துவத்துடன் இணைந்திருந்தது.

(1) ABC (2) BCD (3) CDA (4) DAB

(..........)

11. பாசிசத்திற்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) அரசுக்கு அடிபணிதல் மூலம் தனிமனித சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகின்றது.
(B) ஒரு தலைவரால் வழிநடாத்தப்படும் போது சமூகம் அர்த்தமுடையதாகின்றது.
(C) ஆண்கள் இயல்பாகவே பெண்களை விட உயர்வானவர்கள்.
(D) பெரும்பான்மையினரின் விருப்பதத்தினை அரசாங்கம் கட்டாயம் பிரதிபலிக்க வேண்டும்.

(1) ABC (2) BCD (3) CDA (4) DAB

(..........)

12. சோசலிசத்திற்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) சோசலிசம் தனிப்பட்டவர்களை விட சமூகத்தை முக்கியத்துவப்படுத்துகின்றது.
(B) சோசலிச அரசு பொருளாதாரத்தில் தலையிடுவதில்லை.
(C) சோசலிசத்தின் கீழ் தனியாள் முயற்சி அதைரியப்படுத்தப்படுகின்றது.
(D) சோசலிசம் சமத்துவத்திற்கு முன்னுரிமை வழங்குகிறது.

(1) ABC (2) BCD (3) CDA (4) DAB

(..........)

13. அரசின் படிமுறை வளர்ச்சி வரிசைக்கிரமத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
1) குடும்பம், சமூகம், குலமரபுக்குழு, அரசு.
2) சமூகம், குடும்பம், குலமரபுக்குழு, அரசு.
3) அரசு, சமூகம், குடும்பம், குலமரபுக்குழு.
4) குடும்பம், குலமரபுக்குழு, சமூகம், அரசு

(..........)

14. கீழே தரப்படுபவை அரசு பற்றிய சில வழக்கு மொழிகள் ஆகும்.
(A) அரசு கடவுளின் உலக வெளிப்பாடு ஆகும்.
(B) சமூகம் அரசின் ஒரு கருவியாகும்.
(C) கடவுளரும் மிருகங்களும் மட்டுமே அரசு இல்லாது வாழ முடியும்.
(D) அரசு சமூகத்திற்குச் சமமாகும்
(E) அரசு சில கடமைகளை ஆற்றுகின்றது. வேறு சில கடமைகளை ஆற்ற அது உதவுகின்றது.
மேல் சொன்னவற்றுள்
(1) A தொடக்கம் D வரை பொருத்தமானவை
(2) B தொடக்கம் E வரை பொருத்தமானவை

(3) A யும் D யும் தவிர மற்றவை பொருத்தமானவை
(4) A தவிர மற்றவை எல்லாம் பொருத்தமானவை (..........)

- பின்வரும் அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு 15,16,17 ஆம் வினாக்களுக்கு விடை தருக. இடது பக்கத்தில் தரப்படும் ஒவ்வொரு அரசு பற்றிய கோட்பாடும் மற்றைய பக்கத்தில் தரப்படும் சில சோடி இயல்புகளோடு இணைகின்றது. சரியான சேர்மானங்களை இனங்காண்க.

| அரசியற் கோட்பாடு | இயல்புகள் |
|---|---|
| தாராண்மைவாதம்<br>பாசிசம்<br>சோசலிசம் | (A) அரசு இறுதியில் அற்றுவிடும்.<br>(B) பொது நலனுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கமே அரசு.<br>(C) தனிப்பட்டவர்களின் சுதந்திரம் மிகவும் உயர்வானது.<br>(D) சமத்துவம் என்ற சிந்தனையை ஏற்றுக் கொள்ள முடியாது.<br>(E) அரசு ஒரு வர்க்கக் கருவியாகும்.<br>(F) தனிப்பட்டவர்கள் அரசின் நலனுக்காக சேவை செய்தல் அவசியம்.<br>(G) ஒரு சமூக ஒப்பந்தின் வெளிப்பாடே அரசாகும்.<br>(H) தேசத்தினையும் போரினையும் புகழ்வது.<br>(I) ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் அவரது தேவைகளுக்கேற்ப செயற்பட முடியாது. |

15. தாராண்மைக் கோட்பாட்டிற்குப் மிகவும் பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருக்கும் சேர்மானம்
(1) ABC (2) DEF (3) GHA (4) BCG (..........)

16. சோசலிசக் கோட்பாட்டிற்குப் மிகவும் பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருக்கும் சேர்மானம்
(1) ABC (2) BCD (3) AEI (4) GHI (..........)

17. பாசிசக் கோட்பாட்டிற்குப் மிகவும் பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருக்கும் சேர்மானம்
(1) FDH (2) DFG (3) DGH (4) ADF (..........)

18. பின்வருவனவற்றுள் அரசின் ஆரம்ப தாராண்மைவாதத்துடன் குறைந்த உடன்பாடுடைய கூற்று எது?
(1) குறைந்தபட்சமாக ஆளுகின்ற அரசே சிறந்த அரசாகும்.
(2) மக்கள் தமது சொந்த விவகாரங்களைத் தாமே செய்வதற்குரிய அனுமதியை அரசு வழங்க வேண்டும்.
(3) உடன் இலாபம் தரும் வர்த்தக முயற்சிகளில் மாத்திரம் அரசு முதலிட வேண்டும்.
(4) சட்டம் ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவது அரசின் பொறுப்பாகும். (..........)

19. அரசின் சோசலிச கோட்பாட்டினை விளக்கும் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) அரசு அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஒன்றாகும்.
(B) பொதுவுடமை சமூகமொன்றில் அரசானது பாட்டாளி மக்களின் கைகளில் இருக்கும்.
(C) பொருளாதார அதிகாரத்தினை சிறுபான்மை வைத்திருக்கும் வரைக்கும் அரசு அவசியமானது.
(D) அரசு ஒரு நலன்புரி ஒழுங்கமைப்பல்ல.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD (..........)

20. அரசு பற்றிய சமூக ஒப்பந்தவாதம் பற்றிய சரியான கோட்பாட்டினை விளக்கும் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) தெய்வீக வழியுரிமை கோட்பாடு கீழ்நிலை அடைந்திருந்த பின்புலத்திலேயே சமூக ஒப்பந்தவாதமானது மத்திய கால இறுதியில் ஐரோப்பாவில் அரசின் அதிகாரத்தை நியாயப்படுத்துவதற்காக மேலெழுந்தது.
(B) இதுவரை ஆட்சியாளர்கள் தெய்வத்தின் பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு கொண்டுசென்ற நிலமானிய பொருளாதார முறை, எழுச்சிப் பெறும் வணிக வகுப்புக்கு தடையாக அமைந்தது.
(C) சமூக ஒப்பந்தவாதமானது இதுவரை அரசானது சமூகத்தினால் படைக்கப்பட்டது எனக் கூறப்பட்ட கருத்தியலின் பின்புலத்திலேயே அதற்கு எதிராக தானாகவே தோன்றியதாக கூறப்பட்டது.
(D) இந்த கருத்தியலை கோட்பாடாக முன்வைத்தவர்கள் தோமஸ் ஹொப்ஸ், ஜோன்லொக், ஜீன் ஜெக் ரூசோ ஆகிய மூவருமாவர்.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD
(..........)

21. அரசு பற்றிய சமூக ஒப்பந்தவாத கோட்பாட்டாளர்கள் பற்றிய சரியான சேர்மானத்தை இனங்காண்க.
(A) தோமஸ் ஹொப்ஸ் இங்கிலாந்தில் 1642 – 1648 காலப்பகுதியில் வாழ்ந்தவராவர்.
(B) தோமஸ் ஹொப்ஸினால் இங்கிலாந்தில் சிவில் யுத்தத்தில் ஏற்பட்ட அரசியல் அஸ்திர நிலையினை முடிவுக்கு கொண்டுவருவதற்காகவே இக் கோட்பாடு முன்வைத்தது.
(C) ஜோன் லொக் பிரான்ஸியப் புரட்சிக் காலத்தில் ஏதேட்சையதிகார அரசாட்சி கீழ்நிலைப்படுத்தப்பட்டு பாராளுமன்றின் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக தமது கோட்பாட்டினை முன்வைத்தார்.
(D) ரூசோ பிரான்சில் காணப்பட்ட எதேட்சையதிகார அரசாட்சிக்கும் ஊழல்மிக்க உயர்குழாமின் அதிகாரத்திற்கு எதிராக தமது கோட்பாட்டினை முன்வைத்தார்.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD

(...........)

22. அரசு பற்றிய கார்ள்மாக்ஸ் மற்றும் பெற்றிக் ஏங்கல்ஸ் என்போரால் அறிமுகப்படுத்தப்பட்ட கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) மாக்ஸ்வாதம் என்பது பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாறு மற்றும் சமூகம் பற்றி விபரிப்பதற்காக முன்வைக்கப்பட்ட பரந்த தத்துவமாகும்.
(B) அரசின் தோற்றம், பரவல் மற்றும் எதிர்காலம் பற்றி முன்னர் காணப்படாத வகையான விளக்கம்
ஒன்றினை வழங்கியுள்ளது.
(C) மனித சமூக வரலாறானது வர்க்கப் போராட்ட வரலாறாகவே இதுவரை காணப்பட்டதாக இவர்கள்
குறிப்பிட்டனர்.
(D) வரலாற்றில் காணப்பட்ட ஆரம்ப சமூகத்திலிருந்து இன்றுவரை காணப்பட்ட எதிர்ப்புகளை அடக்குவதற்காக அரசு என்ற தாபனத்தை சொத்துடைய வர்க்கம் பயன்படுத்தியது.

(1) ABC (2) BCD (3) CDA (4) ABD

(...........)

23. அரசு பற்றிய சமவுடமைவாதக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.
(A) புராதன மாக்ஸ்வாத்திற்கு ஏற்ப நவீன முதலாளித்துவ அரசு என்பது உற்பத்தி கருவிகளுக்கு உரிமையாளர்களாக முதலாளிதது வகுப்பினர் உள்ளனர்.
(B) தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டுவதற்காக பயன்படுத்தப்படும் வர்க்கக் கருவி அரசு ஒன்றாகும். இதனாலோயே அரசினை இல்லாதொழிக்க வேண்டும் என மாக்ஸ்வாதிகள் நம்பிக்கை கொள்கின்றனர்.
(C) முதலாளித்துவ அரசை இல்லாதொழிக்கும் வரலாற்றுக் கடமையினை மாக்ஸ் தொழிலாளர் வர்க்கத்திற்கே பெற்றுக்கொடுத்துள்ளது.
(D) கம்யூனிச கட்சி, தொழிலாளர் வர்க்கத்தின் முன்னோடி அரசியல் பதவிக்கு வரும் நிலையில் வர்க்க பேதம் அற்றுப் போகும்.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD

(...........)

24. லிபரல்வாதம் (தாராண்மைவாதம்) தொடர்பான பிழையான கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) 18 ஆம் நூற்றாண்டின் இறுதி அரை நூற்றாண்டில் இருந்து மேற்கு ஐரோப்பாவில் பரவியது.
(2) சுதந்திரம் தொடர்பான அரசியல் கருத்தியல் லிபரல்வாதம் என அறியப்படுகின்றது.
(3) 18 நூற்றாண்டில் பொருளியலாளர்களான எடம் ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்காடோ ஆகிய இருவரால் தாராண்மைவாதம் மறுசீரப்புக்குள்ளானது.
(4) ஜீன் ஜக் மூசோவின் தனியாள் சுதந்திரம், அரசியல் சுதந்திரம் மற்றும் சொத்துரிமைக்கான சுதந்திரம் தொடர்பாக கருத்துக்கள் லிபரல்வாத வளர்ச்சிக்கும், வலுவூட்டலுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது.

(...........)

25. அரசு பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது. அது முற்றிலும் விலகியிருத்தல் வேண்டும் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த எண்ணக்கரு
(1) இது தாராண்மைவாத்தின் பழையான பிரிவாகும்.
(2) இது தாராண்மைவாத்தின் நவீன பிரிவாகும்.
(3) இது தாராண்மைவாத்தின் நவ பிரிவாகும்.
(4) இது தாராண்மைவாத்தின் மற்றொரு பிரிவாகும்.

(...........)

26. லிபரல்வாதம் தொடர்பான தவறான சேர்மானம் பின்வருவனவற்றுள் எது?
(1) லிபரல்வாதம் - வரையறையற்ற அரசு எண்ணக்கரு
(2) புராதான லிபரல்வாதம் - தலையிடா அரசு எண்ணக்கரு
(3) நவீன லிபரல்வாதம் - நலன்புரி அரசு எண்ணக்கரு
(4) நவ லிபரல்வாதம் - குறைந்தப்பட்ச அரசு எண்ணக்கரு

(...........)

27. சமூக சமத்துவமின்மை, பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் முகங்கொடுக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடவேண்டி தோற்றம் பெற்ற எண்ணக்கரு
(1) வரையறையற்ற அரசு எண்ணக்கரு
(2) தலையிடா அரசு எண்ணக்கரு
(3) நலன்புரி அரசு எண்ணக்கரு
(4) குறைந்தப்பட்ச அரசு எண்ணக்கரு

(..........)

28. அரச பற்றிய நலன்புரிவாதம் தொடர்பான தவறான கூற்று பின்வருவனவற்றுள் எது?
(1) அரச நலன்புரிவாதம் பின்னிலையடைந்து முகாமைத்துவ அரசு எண்ணக்கரு பரவலடைந்தது.
(2) நவ தாராண்மைவாத எண்ணக் கருவினால் மீணடுமொருமுறை அரசின் பணிகளை கட்டுப்படுதத்ல் அல்லது குறைத்தலை கண்டுக்கொள்ள முடியும்.
(3) குறைந்தப்பட்ச அரசு பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டை செலுத்தும்.
(4) சமூக அரசியல் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக அரசு முற்றிலும் தலையிட வேண்டும் என்கின்றது.

(..........)

29. அரசு பற்றிய பெண்ணியல்வாதம் தொடர்பான சரியான சேர்மானம் பின்வருவனவற்றுள் எது?
(A) அரசு தொடர்பிலான விசேட பெண்ணியல்வாத கோட்பாடுகள் பல உள்ளன.
(B) அரசு மற்றும் அரசியல் தொடர்பாக விசேடஅணுகுமுறை ஒன்றை பெண்ணியல்வாதம் முன்வைத்துள்ளது.
(C) இது "பால்நிலையினை அடிப்படையாகக் கொண்டது".
(D) அரசு என்பது ஆண்களை மையப்படுத்தி உருவாக்கப்படும் உலகத்தை முன்னோக்கி கொண்டு செல்லும் ஆண்களின் கருவியாகவாகும்.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD

(..........)

30. பின்வருவனவற்றுள் அரசு தொடர்பான பெண்ணியல் வாதத்திற்கான கோட்பாடுடன் நெருக்கமான கூற்றுக்களைக் கொண்ட சேர்மானம் பின்வருவனவற்றுள் எது?
(A) லிபரல்வாதம் மற்றும் மாக்ஸ்வாத கருத்தியல்களுக்கிடையே இது சுழல்கிறது.
(B) லிபரல் பெண்ணியல்வாதிகள் பெண்களின் விடுதலைக்காக அரசின் தலையீட்டினை மறுக்கின்றனர்.
(C) மாக்ஸ்வாத பெண்ணியல்வாதிகள் முதலாளித்துவ அரசை எதிர்க்கவேண்டும் என்கின்றனர்.
(D) ஆண்மைய கருவியாக உள்ள அரசு, பெண்கள் மீது ஆண்கள் உலகத்தை திணிக்கும் கருவியாக செயற்படுவதாக குறிப்பிடுகின்றனர்.
(1) ABC (2) BCD (3) CDA (4) ABD

(..........)